DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 364/2019

PROSECUTION WITNESS L.W.3/P.W.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கவேல் | தகப்பனார் பெயர் | பழனியப்பன் |
| கிராமம் | முத்தம்பாளையம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | விவசாயம் | வயது | |

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 25.11.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, முத்தம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன்.

2) அ.சா.1 கோமதி எனது பக்கத்து வீட்டுக்காரப் பெண். 13 ம் தேதி, 12 ம் மாதம் வருடம் ஞாபகமில்லை. காலை 10.30 முதல் 11.00 மணி சுமாருக்கு அ.சா.1 கோமதி தம்பிக்கலைஐயன் கோவில் அருகே வந்து கொண்டிருந்தபோது, நான் ஈரோடு சென்றுவிட்டு முத்தம்பாளையம் தம்பிக்கலைஐயன் கோவில் அருகே வந்தபோது, எனக்கு எதிரே ஆஜர் எதிரிகள் இரு சக்கர வாகனத்தில் வந்து கோமதி அருகில் ஒட்டிச் சென்று 1 ம் எதிரி டேவிட் வண்டியை ஓட்ட 2 ம் எதிரி அலாவூதின் பாட்ஷா கோமதியின் கழுத்தில் இருந்த கொடியை அறுத்துக் கொண்டு வண்டியில் வேகமாக சென்றுவிட்டார்கள். நான் ஆக்டிவா வண்டியில் சிறிது தூரம் துரத்திச் சென்றேன், ஆனால் அவர்களை பிடிக்க முடியவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.25 18:50:39 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நானும், அ.சா.1 கோமதியும் ஒரே வீதியில் வசித்து வருகிறோம். நான் அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு ஈரோட்டிற்கு உப்பு வாங்குவதற்காக சென்றேன். காலை 9.30 மணிக்கு காளைமாடு சிலை அருகில் உள்ள முருகன் & கோ கடைக்கு சென்றேன். எங்கள் வீட்டிலிருந்து அந்த கடை 5,6 கி.மீ இருக்குமா என்றால் 7 கி.மீ தொலைவு இருக்கும். அ.சா.1 கோமதி எனக்கு 3 வருடங்களாக பழக்கம். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை ஒருமுறை விசாரித்தார்கள். என்னை போலீசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கும்போது மணி சுமார் 4.30 -5.00 இருக்கும். செயினை பறித்துச் சென்ற சம்பவம் கண் இமைக்கும் நேரத்தில் நடந்ததா என்றால் 1 நிமிடத்தில் நடந்தது. அந்த இடத்தில் நிறைய கடைகள் இருந்ததா என்றால் இல்லை. வீடுகள் இருந்தது. முத்தம்பாளையத்தில் நாங்கள் குடியிருக்கும் வீதியின் பெயர் முருகன் நகர் என்றால் ஆமாம். அ.சா.1 கோமதி குடியிருக்கும் வீதியின் பெயர் முருகன் நகர் என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் அந்த இடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 2,3 பேர்கள் இருந்தார்கள். கவுண்டச்சிபாளையம் தம்பிக்கலை ஐயன் கோவிலில் இருந்து சுமார் 2 கிமீ தொலைவு இருக்கும் என்றால் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் ஒரு ரோடு ஈரோடு செல்லும் என்றாலும், எதிர்புறம் ரோடு கவுண்டச்சிபாளையம் செல்லும் என்றாலும் சரிதான். நான் முருகன் & கோ - இருந்து கிளம்பும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் சரியாக நேரம் குறிப்பிட்டு சொல்ல முடியாது. 9.30 மணிக்கு கிளம்பிஇருப்பேன். நான் முருகன் & கோ - இருந்து கிளம்பி முத்தம்பாளையம் வரும் போது மணி சுமார் 10.15 – 10.45 இருக்கும் என்றால் ஆமாம். சம்பவ இடத்திலிருந்து நான் கிளம்பும்போது மணி 12.00 இருக்கும். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல்நிலையம் ஒரு முறை சென்றேன். அப்போது அங்கு யாரும் இல்லாததால் வந்துவிட்டேன். பின்னர் போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தபோதும், நான் காவல்நிலையம் சென்றபோதும் கோமதி என்னுடன் வரவில்லை. நான் எவ்வளவு தூரம் துரத்திச் சென்றேன் என்றால் சுமார் 1 கிமீ துரத்திச் சென்றேன். இருசக்கர வாகனத்தின் பதிவு எண், கலர் மற்றும் விவரங்களை நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் ஆமாம். இரு சக்கரவாகனத்தில் வந்ததாக சொன்ன நபர்களின் அங்க அடையாளங்களை நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றாலும், போலீசாரும் கேட்கவில்லை என்றாலும் ஆமாம். போலீசாரிடம் யார் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்பதையும் சொல்லவில்லை என்றால் ஆமாம். காவல்நிலையம் சம்பவ இடத்திற்கு அருகில் தான் உள்ளது என்றால் ஆமாம். பொதுவாக

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.25 18:50:44 +0530

சம்பவ இடத்தில் வண்டி வாகனங்கள் மற்றும் ஜன நடமாட்டம் காலை நேரத்தில் அதிகமாக இருக்கும் என்றால் 10.00 மணி வரை இருக்கும். போலீசார் உடனடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். ஒரு மணி நேரம் கழித்து போலீசார் வந்தார்கள். போலீசார் வந்து கோமதியிடமும், என்னிடமும், அங்கிருந்தவர்களிடமும் என்ன நடந்தது என்று கேட்டார்கள் என்றால் ஆமாம். கோமதியின் மகள் மற்றும் கணவரின் பெயர் எனக்கு ஞாபகமில்லை. போலீசார் என்ன நடந்தது என்று எழுதி கோமதியிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் நான் அதை கவனிக்கவில்லை. எனது பெயர், விவரங்கள் மற்றும் தொலைபேசி எண்ணை போலீசார் எழுதி வாங்கிக் கொண்டார்கள். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் பொய்யானது என்றாலும், நான் சொன்ன நாள், நேரத்தில் சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும், ஆஜர் எதிரிகள் அங்கு இல்லை என்றாலும், ஆஜர் எதிரிகள் கோமதியிடம் இருந்து செயினை பறித்தாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. இன்று தான் முதன்முறை போலீசார் நீதிமன்றத்திற்கு வெளியில் வைத்து எதிரிகளை அடையாளம் காட்டினார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.25 18:50:47 +0530

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

Judicial Magistrate No.I,
Erode.